23rd March 1965]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) 1964 ஜுன் மாதத்தில் திருச்சி தெற்கு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் அரசாங்க பஸ் போக்குவரத்துத் துறை நாகப்பட்டிணத்திலிருந்து மதுரைக்குப் புதிய பஸ் வழி ஒன்றைத் தொடங்கும்படி அங்கத்தினர் கருத்து தெரிவித்தார். அக் கருத்தினை திருச்சிராப்பள்ளி கலெக்டர் தமிழ்நாடு அரசாங்க பஸ் போக்குவரத்துத் துறை நெறியாளருக்குத் தெரிவித்தார்.

(இ) அந்த வழி சுற்றி வளைத்து செல்வதாலும், நாகப்பட்டிணத்திலிருந்து நாகர்கோயிலுக்கு மதுரை வழியாக புதிய பஸ் வழி ஒன்றைத் தொடங்கத் திட்டமிருப்பதாலும், அந்தக் கருத்தினை ஏற்க இயலாதென்று நெறியாளர் கலெக்டருக்கு அறிவித்தார். 1964 அக்டோபரிலிருந்து நாகப்பட்டிணம்-நாகர்கோவில் (மதுரை வழி) புதிய பஸ் வழி இரண்டு பஸ்களுடன் இப்போது திறக்கப்பட்டுவிட்டது.

திரு. ஆ. கு. சுப்பையா : நடப்பு ஆண்டில் எத்தனை பஸ்கள் நாகப்பட்டிணத்திலிருந்து விடுவதற்கு அரசாங்கம் உத்தேசித்து இருக்கிறது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதை எல்லாம் "டிமாண்டின்" போது எழுதிக் கொடுத்து இருக்கிறேன். இப்போது அது ஞாபகம் இல்லை. கனம் உறுப்பினர் என் அறிக்கையைப் பார்த்தால் எல்லா விவரங்களும் இருக்கும்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : இப்போது பஸ சர்விஸ்கள் மக்களுக்கு உபயோகமாக இருக்கிறது. ஆனால் 25 மைலுக்கு குறைந்து நிறுத்தக்கூடாது என்று சொல்லுகிறார்கள். ஒரே ஸ்டாப்பிங் நாகப்பட்டிணத்திலிருந்து திருவாரூர்வரை. நான்கு ரோடுகள் சந்திக்கும் கொரடாச்சேரியில் ஸ்டாப்பிங் வைக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இருபத்தைந்து மைலுக்கு ஒரு இடத்தில்தான் நிறுத்த முடியும். அப்படி இல்லை என்றால் அது எக்ஸ்பிரஸ் பஸ் இல்லை. சாதாரண பஸ்ஸாக போய் விடும். ஏதாவது ஒரு இடத்தில் அவசியமாக நிறுத்த வேண்டுமென்று கனம் உறுப்பினர் எழுதி அனுப்பினால், நான் அதைப் போக்குவரத்து இலாகா டைரக்டர் அவர்களை பரிசீலனை செய்யச் சொல்கிறேன்.

Two buses from Krishnagiri to Madras

*307 Q.—Sri C. KOTHANDARAMA BAGAVATHAR: Will the Hon. the Minister for Industries be pleased to state with reference to the answer given to question No. 65 on 22nd January 1965, whether there is any proposal to put two buses between Krishnagiri and Madras (via) Ambur, Vellore and Arcot?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஆம்.

திரு. வை. சங்கரன் : இதை எப்போது ஆரம்பிப்பதாக உத்தேசம் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு நோடிபிகேஷன் எல்லாம் போட்டாய் விட்டது. எந்தத் தேதி என்று குறிப்பிடவில்லை. ஆனால் இதற்கு வேண்டிய பூர்வாங்க நடவடிக்கை முடிந்துவிட்டது.

திரு. எஸ். முருகையன் : 120 மைலுக்கு அப்பால் உள்ள இடங்களுக்கு எல்லாம் சர்க்காரே நடத்தும் என்று சொல்லப்பட்டது. இப்படி சொல்லி நான்கு மாதங்களாகியும் பஸ் செல்லாமல் இருக்கிறது. உடனே இந்த ரூட்களை எடுத்து பஸ் விட சர்க்கார் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[23rd March 1965

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எனக்குக் கூட உடனே விடுவதற்கு இஷ்டம்தான். ஆனால் சர்க்கார் கூட சட்டத்திற்கு உட்பட்டு, விதிகளின் படி நடக்க வேண்டி இருக்கின்றன. ஒரு ரூட் "ஓபன்" செய்யவேண்டுமென்று சொன்னால் எப்படி தனியாருக்கு விதிகள் இருக்கிறதோ, அதே போல் சர்க்காருக்கும் விதிகள் இருக்கின்றன. நோடிபிகேஷன் செய்யவேண்டும். அப்ஜெக்ஷன்ஸ் கேட்க வேண்டும். பப்ளிகேஷன் செய்ய வேண்டும். அதற்குப் பிறகு தான் "ஓபன்" செய்ய முடியும். இந்த நெருக்கடி ஹைகோர்ட்டு தீர்ப்பினால் ஏற்பட்ட நெருக்கடி. எவ்வளவு துரிதமாக முடியுமோ அதைச் செய்வதற்கு முயற்சி செய்து வருகிறோம். இருந்தாலும் சட்டத்திற்கு, விதிகளுக்கு உட்பட்டு தான் நடக்கவேண்டுமென்று தெரிவிக்க விரும்புகிறேன்.

புலவர் கா. கோவிந்தன்: சென்னைக்கும், கிருஷ்ணகிரிக்கும் இடையே காஞ்சீபுரம், திருவத்திபுரம், ஆரணி, போளூர், செங்கம், ஊத்தங்கரை, மத்தூர் ஆகிய இடங்கள் வழியே பஸ் விடவேண்டுமென்று அரசாங்கத்திற்கு தகவல் வந்திருக்கிறது. ஆறு மாதமாகியும் பஸ் விடவில்லை. உடனடியாக விடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்த பிரபோஸல் மீது 1964 அக்டோபர் 6-ம் தேதியில் வேண்டிய உத்தரவு 'சாங்ஷன்' போட்டு விட்டோம். பப்ளிகேஷன் செய்யவேண்டும். அப்ஜெக்ஷன்ஸ் கேட்க வேண்டும். இந்தக் காரணத்தால், இதை இன்னும் எடுக்கவில்லை. சீக்கிரமே துவக்கப் படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. கமலநாதன்: அரசாங்க பஸ் நேராக போவதில்லை. சுற்றி வளைத்து போகிறது. குறிப்பாக காஞ்சீபுரம், திருவத்திபுரம் வழியாக நீண்ட தூர பிரயாணம். நான் கிருஷ்ணகிரி போவதாயிருந்தால் இந்த பஸ்ஸில் போவதில்லை. காஞ்சீபுரத்திலிருந்து சென்னைக்கு வாணியம் பாடி, வேலூர், ராணிப்பேட்டை வழியாக சென்னைக்கு நேராக பஸ் விட முயற்சி எடுக்கப்படுமா ?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன்: சர்க்கார் பஸ் பல்வேறு கருத்து களைக்கொண்டு போகவேண்டி இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவருக்கு நேராக கிருஷ்ணகிரியிலிருந்து சென்னைக்கு பஸ் விட்டால் அவருக்கு சௌகர்யம். ஆனால் காஞ்சீபுரத்தில் உள்ளவர்கள் எங்கள் ஊர் வழியாக பஸ் சென்றால்தான் சௌகர்யம் என்று சொல்கிறார்கள். திருப்பத்தூரில் இருப்பவர்கள் அவர்கள் ஊர் வழியாக சென்றால் சௌகர்யமாயிருக்கும் என்று சொல்கிறார்கள். பல பேர் சௌகர்யங்களை கருத்தில் கொண்டுதான் இந்த ரூட்களை எல்லாம் தீர்மானிக்க வேண்டி இருக்கிறது.

திரு. வை. சங்கரன்: கிருஷ்ணகிரியிலிருந்து செல்லும்போது அந்தந்த ரூட் பஸ்களை பெங்களூர் வரை நீடிக்க சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா ? அப்படி இருந்தால் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சென்னை ராஜ்யத்திற்கும், மைசூர் ராஜ்யத்திற்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு இருக்கிறது. அந்த ஒப்பந்தம் அமுல் ஆவதற்கு அவர்கள் சட்டத்தின்கீழ் பல நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருக்கின்றன. அந்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்தால், பெங்களூரிலிருந்து, நாம் எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் நம் பஸ்ஸை விடலாமென்றும், கோயம்புத்தூரிலிருந்து அவர்கள் பகுதிக்கு, உரிமை அளித்து, அவர்கள் பஸ் விடலாம் என்றும் ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்கிறது.

தொழிற் பயிற்சி நிலையங்கள் (தென்னார்க்காடு)

* 308. **கேள்வி.—திரு. தா. சின்னசாமி:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964–65-ல் தென்னார்க்காடு மாவட்டத்தில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் எத்தனை மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள்?